# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது</u>

புகார்தாரர் திரு.அசோக்குமார், விழுப்புரம் மாவட்டம் ஓலக்கூர் மேல்பாதி கிராமத்தில் வசித்து வருகிறார், இவர் கீழ்பாதி கிராமத்தில் தன்னுடைய அண்ணியுடன் சேர்ந்து 3161 சதுர அடி காலிமனை மற்றும் அதில் 520 சதுரடியில் கட்டியுள்ள வீட்டினையும் கடந்த 27.04.2022ம் தேதி அவரபாக்கப்பம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். மேற்படி இடத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய ஓலக்கூர் கீழ்பாதி கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பத்திருந்தார். மேற்படி மனு மீது 15 நாட்களாகியும் எந்த விபரமும் தெரியாததால் மேற்படி ஓலக்கூர் கீழ்பாதி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரடியாக சென்று திரு.கருணாகரன், கிராம நிர்வாக அதிகாரியை சந்தித்துள்ளார். கிராம நிர்வாக அலுவலர் திரு.கருணாகரன் புகார்தாரரிடம் உங்களுடைய பட்டா மாறுதல் சம்பந்தமான மனு தன்னிடம் தான் login உள்ளது என்றும் உங்களுடைய மனுவை பரிந்துரை செய்ய வேண்டுமானால் தனக்கு ரூ.5,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். உடனே புகார்தாரர் இந்த கட்டணம் அரசு செலுத்த வேண்டிய தொகையா என கேட்டுள்ளார். அதற்கு கிராம நிர்வாக அதிகாரியான திரு.கருணாகரன், இந்த பணம் எனக்குத்தான் என்றும் 30 லட்சம் கொடுத்து சொத்து வாங்க முடியுது பட்டா மாற்றம் செய்ய ரூ.5,000/- கொடுக்க முடியாதா என கூறியுள்ளார். பின்பு தான் ஓங்கூர் கிராம நிர்வாக அலுவலர் என்றும் ஓலக்கூர் கீழ்பாதி கிராம நிர்வாக அதிகாரியாக பொறுப்பு வகிப்பதாகவும், 04.01.2022ந் தேதி ரூ.5,000/-த்துடன் ஓங்கூர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து பார்க்குமாறு கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், விழுப்புரம் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 04.01.2023 திரு.கருணாகரன், கிராம நிர்வாக அதிகாரி லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## VAO TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR PATTA NAME TRANSFER

The complainant Tr.Ashok Kumar, is residing at Olakur Melpathi Village, Villupuram District. The complainant and his sister-in-law purchased a land measuring 3161 Sq.ft. with 520 Sq.ft. constructed house. On 27.04.2022 the property was registered at Sub Registrar Office, Avarapakkappam, Villupuram District. The complainant had applied patta name transfer for the above property through online on 14.12.2022 at Olakkur Keelpathi Village Administrative Office. Even after 15 days there was no communication from the said VAO Office. On 03.01.2023 the complainant went to the Village Administrative Office and contacted one Tr.Karunakaran, who is the Village Administrative Officer of the above office, he is also incharge officer of Olakkur Keelpathi Village Administrative Office. Tr.Karunakaran said to the complainant that your patta name transfer application is in my login i.d. and if the application is to be processed you have to pay Rs.5,000-/ as bribe to me. Further Tr.Karunakaran had commented that you are able to purchase the property for Rs.30 lakhs, and cant you give Rs.5000/- to me. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Villupuram detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today 04.01.2023, during the trap Tr. Karunakaran, Village Administrative Officer, reiterated his demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested.